1987 ஏப்ரல் 22] [திரு. கே. சுப்பராயன்]

உதவி அறுவை மருத்துவரை அழைத்துப் பேசி, வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்த மருத்துவர் நீதிமன்றத்தில் தடை ஆணை வாங்கியிருக்கிறார். தடை ஆணையை விலக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தடை ஆணையை விலக்கிய பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

(ஆ) கரூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. சோலை ராசு, சு. ஜெகதீசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டுவருவார்.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் நகரில் உள்ள சாயப்பட்டறைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் அப்பகுதி மக்களுக்கு பல், ஈறு வீங்குதல், தோல் வியாதி, வயிற்றுப் போக்கு தோன்றுவதால் பாதிக்கப் பட்ட அவர்களது நிலைமை" குறித்த அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 வது பிரிவின் கீழ் அன்றாடக் கழிவுநீர்/தொழிற் சாலைக் கழிவுநீரினை வெளிவிட வாரியத்தின் அனுமதி கோரி, கரூரில் உள்ள 46 சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் விண்ணப்பித் துள்ளன

வெளுத்தல், படையிடுதல், சாயம் போடுதல் முதலியன தயாரிப்பு முறைகளாகும். அமராவதியில் 11 தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலைக் கழிவு நீரினை வெளியேற்றுகின்றன. மீதமுள்ள தொழிற்சாலைகளின் தொழிற்சாலைக் கழிவுநீரையும் அன்றாடக் கழிவுநீரையும் சேர்த்து திறந்த வடிகாலில் தொழிற்சாலைகள் வெளியேற்றுகின்றன. இந்த வடிகால் திறந்த வெளி நிலத்தை அடைகின்றன அல்லது அருகிலுள்ள நீர்நிலைகளை அடைகின்றன. தொழிற்சாலைக் கழிவுநீரானது நிறமுடையதாகும். இது மிதக்கும் திடப் பொருட்களையும், கரைந்த திடப் பொருட்களையும், உயிர் இரசாயன உயிரகத் தேவை, இரசாயன உயிரகத் தேவையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், நீர் நிலைகளிலோ அல்லது நிலத்திலோ வெளியேற்றப்படும்பொழுது நிலநீர் மற்றும் நிலத்தடிநீர் மாசுபட வாய்ப்புள்ளது.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி அன்றாடக் கழிவுநீர்/தொழிற்சாலைக் கழிவு நீரினை வெளியிடுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பிக்காத கரூரிலுள்ள 28 தொழிற்சாலைகளின் மீது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழக்குத் தொடர்ந்துள்ளது. 31 தொழிற்சாலைகளுக்கு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப சுத்திகரிப்பு செய்து வெளிவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

*திரு. க. சோலைராசு: தலைவரவர்களே, நான் இதே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒரு ஆண்டுக்கு முன்னால் கொடுத்தபோது அப்போது அளிக்கப்பட்ட விவர அறிக்கையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருந்தார்கள். அது தொடர்பான வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் இருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்தில் இருந்தாலும், அங்கே பாதிக்கப்படுகிற மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்ற காரணத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலும் இனிமேல் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் வழக்கு முடிந்து

1987 ஏப்ரல் 22] [திரு. க. சோலைராசு]

தீர்ப்பு வருவதற்கு இடையில் அந்த சாயப் பட்டறைகளை நிறுத்திவைக்க அரசு உத்தரவிடுமா? திருச்சி மாநகரில் இதைப் போன்று சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரை பரிசோதனை செய்து பார்ப்பதற்கு ஆய்வுக்கூடம் இல்லை. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் இதுசம்பந்தமாக ஒரு ஆய்வுக் கூடத்தை நிறுவ மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்கள் அரசுக்குத் தெரியும். மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறு, சிறு யூனிட்டுகளாக இருப்பதால் ஒவ்வொன்றும் தனித்தனியாக கழிவுநீரை சுத்தி கரிப்பு செய்வதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று தெரிய வில்லை. சிறிய அளவில் இயந்திரங்களை வைத்து கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்கின்ற சாத்தியக்கூறு இருக்கிறதா என்று ஆராயச் சொல்லி மாசு கட்டுப்பாடு வாரியத்தை அரசு கேட்டிருக் கிறது.

அடுத்து, திருச்சியிலே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அதுபற்றிய பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(இ) மார்த்தாண்டம் மேல்நிலைப்பள்ளியில் சில மாணவர்களுக்கு தேர்வு எழுத அனுமதியின்மை.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டத்திற்குட்பட்ட மார்த்தாண்டம் அரசு மேல் நிலைப் பள்ளியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆசிரியர் பயிற்சி (டி.டி.சி) வகுப்பில் படித்துவரும் மொத்தம் 17 மாணவர் களும் தேர்வு எழுத அனுமதி வழங்கப்படாததால் அம்மாணவர் களும் பெற்றோர்களும் அடைந்துள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.